# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

**O.S. No. 34 /2010**

**12.06.2026 பி.வா.சா.ஆ.2 ஜெயந்த் த/பெ. டேவிட்**

சத்திய பிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

இந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். எனக்கு அதிகார முகவராக கொடுத்த சொத்தை முதலில் வாங்கியவர் கிஷன் லால் என்பவருக்கு உரிமையானது என்று எனக்கு தெரியும். இந்த வழக்கு ஆரம்பமானது முதல் எனக்கு தெரியும். மதுகான் கிரானைட்க்கு நான் மேலாளர் என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் சார்பாக இந்த வழக்கில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்று நியாபகம் இல்லை. எங்கள் நிறுவனம் சார்பில் எந்த பதிலுரையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதியின் பதிலுரையை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம். எந்த தேதியில் அவ்வாறு ஏற்றுக் கொண்டோம் என்றால் நியாபகம் இல்லை. 8ம் பிரதிவாதியில் தரப்பில் எந்த பதிலுரையும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், 7ம் பிரதிவாதியின் பதிலுரையை ஏற்றுக் கொள்வதாக எந்த ஆவணமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. முருகன் என்பவரிடம் இருந்து எங்கள் நிறுவனம் 15.02.2006 அன்று கிரையம் பெற்றோம். 25.01.2006 அன்று முருகன் கிரையம் பெற்றுள்ளார். முருகன் கிரையம் பெற்ற ஒரு மாதத்திற்குள் நாங்கள் வாங்கிவிட்டோம் என்றால் சரிதான். ராஜா என்பவர் முருகனுக்கு 24.01.2006 அன்று அதிகார முகவர் மூலம் கிரையம் கொடுத்தார். ராஜா என்பவருக்கு 24.01.2006 அன்று ரூப்சந்த் பவர் கொடுத்தார். ரூப்சந்த் என்பவர் கிஷன்லாலின் ஒரு மகன் என்றால் சரிதான். ரூப்சந்த்திற்கு அந்த சொத்தை விற்க முழு உரிமை இல்லை என்றால் கிஷன்லால் ரூப்சந்திற்கு ஆதரவாக உயில் எழுதிக் கொடுத்து இருந்தார். 17.05.1997 அன்று கிஷன்லால் என்பவர் ரூப்சந்திற்க உயில் எழுதிக் கொடுத்தார். மேற்படி உயிலை நான் பார்க்கவில்லை. மேற்படி உயிலை எங்கள் நிறுவனத்தை சேர்ந்த வேறு நபர்கள் பார்த்துள்ளார்கள். அந்த நபர்கள் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வரவில்லையா என்றால் அவர்கள் தற்போது கம்பெனியில் பணிபுரியவில்லை. மேற்படி உயில் பதிவு செய்யப்பட்டதா இல்லையா என்று எனக்கு தெரியாது. அதில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் யார் என்றால் ரூப்சந்தின் அம்மா பார்சிபாய் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார். வேறு யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி பார்சிபாய் சாட்சி கையொப்பம் போட்ட விவரத்தை என்னுடைய சாட்சியத்தில் சொல்லவில்லை. ரூப்சந்திற்கு ஆதரவாக கிஷன்லால் உயில் எழுதி இருந்தால் தான்

ரூப்சந்த் சொத்தை கிரையம் கொடுக்க முடியும் என்றால் சரிதான். நான் வாங்கிய சொத்து சர்வே எண் 23 /6ஏ3 பிரிவில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 26/6ஏ3 என்றால் அது தவறு. வழக்கு சொத்தில் எங்கள் நிறுவனத்திற்கு எந்த பாத்தியதையும் இல்லை என்றும், எனக்கு சாட்சி அளிக்க அருகதையில்லை என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் பொது அதிகார பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் பொது அதிகார பத்திரத்தின் அசலை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொது அதிகார பத்திரம் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனை தொடர்ந்து 6ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தின் பெயரிலும், கிஷன்லால் பெயரிலும் கூட்டாக பட்டா வழங்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over to the witness and acknowledged by him/her as correct.

**Sd/- B.C.Gopinath**

Additional District Judge,
Tiruvannamalai.